OS.No.431/2021 – 11.08.2025

PW1 – செல்வகுமார்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு இடம் வாங்குவதற்காக ஒரு அக்ரிமெண்ட் போட்டிருக்கிறேன், அதனால் கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் நிலத்தை விற்க வேண்டும் என்று பிரதிவாதிகள் எந்த ஒரு ஒப்பந்தமும் போடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்ன தொழில் செய்கிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. எனது ஊருக்கும் பிரதிவாதிகளின் ஊருக்கும் எவ்வளவு தூரம் என்றால் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். பிரதிவாதிகளை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 10,15 வருடமாக தெரியும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் வெள்ளி கூலி வேலை செய்து வருகிறேன். மாதம் எவ்வளவு சம்பாதித்து வருகிறேன் என்றால் மாதம் ரூ.50,000/– சம்பாதிக்கிறேன். எனது வீட்டில் வேறு யார் சம்பாதிக்கிறார்கள் என்றால் நான் மட்டும் சம்பாதிக்கிறேன், எனது மகன்கள் பள்ளிக்கு செல்கிறார்கள்.

கிரய ஒப்பந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வெள்ளையம்மாவிற்கு பாத்தியப்பட்டது. வெள்ளையம்மாவிற்கு

பாத்தியப்பட்டது என்பது தெரிந்துதான் நான் கிரய ஒப்பந்தம் போட்டேன் என்றால் சரி. கிரய ஒப்பந்த சொத்தில் வெள்ளையம்மாவை தவிர வேறு யாருக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல. வெள்ளையம்மாவிற்கும் அவரது குடும்ப வாரிசுகளுக்கும் அதில் உரிமை உள்ளது.

சொத்தின் உரிமையாளர் இறந்தபின்னர்தான் அவரது வாரிசுதாரர்களுக்கு பாத்தியமாகும் என்றால் சரியல்ல. வழக்கில் கிரய ஒப்பந்தமே ஏற்படவில்லை என்றும் அதில் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிரய ஒப்பந்த பத்திரம் போலியானது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் வெள்ளி கொழுசு, அரைஞான்கயிறு, மெட்டி தொழில் செய்து சென்னைக்கு அனுப்பி வருகிறார்கள் என்றால் இருக்கலாம். அவர்கள் வெள்ளி வியாபாரம் செய்வதற்கு என்னிடம் 2016 மார்ச் மாதம் 50 கிலோ வெள்ளியை என்னிடம் தொழிலுக்காக வாங்கினார்கள் என்றும் அதற்கு மாதம் 250 கிராம் வெள்ளி வட்டியாக கொடுக்க வேண்டும் என்று பேசப்பட்டது என்றால் சரியல்ல, நான் பணமாகதான் கொடுத்தேன்.

நான் 50 கிலோ வெள்ளியை கொடுக்கும்போது பிரதிவாதிகளிடம் பூர்த்தி செய்யாத பாண்ட் பேப்பர்கள் மற்றும் பச்சை தாள்களில் நான் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரியல்ல. அவ்வாறு வாங்கப்பட்ட

பத்திரத்தை நான் கிரய ஒப்பந்தமாக போலியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மத்திய அரசால் பண மதிப்பிழப்பு செய்ததால் பிரதிவாதிகளின் தொழில் பாதிக்கப்பட்டதால் என்னிடம் வாங்கிய வெள்ளியை திருப்பி கொடுப்பதற்கு கால தாமதம் ஆனது என்றால் சரியல்ல. டிசம்பர் 2018ல் எனக்கு கொடுக்க வேண்டிய வெள்ளியை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் வெள்ளியை திருப்பி கொடுத்துவிட்டு என்னிடம் கொடுத்த அசல் பத்திரத்தை திருப்பி கேட்டார்கள் என்றும் நான் மேலும் கூடுதலாக 7 கிலோ வெள்ளியை கொடுத்தால்தான் பத்திரத்தை திருப்பி கொடுப்பேன் என்று கூறிவிட்டேன் என்றால் சரியல்ல. மீண்டும் நான் கேட்ட 7 கிலோ வெள்ளி அதிகமாக இருப்பதால் அதை 3 கிலோ வெள்ளியாக திருப்பி கொடுக்க பைசல் பேசப்பட்டு அதை நானும் ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. அப்போது கொரோனா தொற்று காரணமாக தொழில் நலிவடைந்ததால் அந்த 3 கிலோ வெள்ளியை கொடுக்க கால தாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன்பிறகுதான் நான் பிரதிவாதிகள் ஏற்கனவே என்னிடம் கொடுத்த வெற்றுதாள்கள் மற்றும் வெற்று பாண்ட் பேப்பர்களை நான் கிரய ஒப்பந்தமாக போலியாக தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

கிரய ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து யார் செய்துள்ளார்கள்

என்றால் அய்யனார், குமரவேல் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். குமரவேல் எங்கே இருக்கிறார் என்றால் ஏற்கனவே மோட்டூரில் இருந்தார், தற்போது மெய்யம்தெருவில் இருக்கிறார். குமரவேலுக்கு மேற்படி விவரம் தெரியுமா என்றால் அவருக்கு தெரியும். மேற்படி சாட்சிகளை அவர்தான் அழைத்து வந்தார். அய்யனார் எந்த ஊர்க்காரர் என்றால் அவரும் மோட்டூர்தான். மேற்படி இரண்டு சாட்சிகளையும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். கிரய ஒப்பந்த பத்திரத்தில் 2வது பக்கத்தில் கீழிருந்து 5வது வரியில் அழித்து 6 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. எழுத்து பிழை ஏற்பட்டிருக்கும், அதை மாற்றியிருப்பார்கள்.

பத்திரத்தில் இன்றுமுதல் மற்றும் வருடத்திற்கு இடையில் 6 என்பது எழுதப்பட்டுள்ளதில் அதிக இடைவெளி உள்ளது என்றால் சரி. இந்த பத்திரத்தை போலியாக தயார் செய்தது மட்டுமில்லாமல் காலவரையறைக்காக மேற்படி 6 என்பதை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பிழை திருத்தம் உள்ளதாக பத்திரத்தில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

இதற்கு முன்னர் எந்த வழக்கறிஞரை வைத்திருந்தேன் என்றால் கே.எம்.ஜெயபால் என்ற வழக்கறிஞரை வைத்திருந்தேன். இந்த வழக்கை மக்கள் நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ளலாம் என்று மெமோ தாக்கல் செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. அதன்படி

மக்கள் நீதிமன்றத்திலும் ஆஜரானேன். மக்கள் நீதிமன்றத்திற்கு அனுப்புமாறு இருதரப்பினரும் சேர்ந்து தாக்கல் செய்த 17.10.2024 தேதியிட்ட மெமோதான் என்னிடம் காண்பிக்கப்படும் மேற்படி மெமோ என்றால் சரி. மேற்படி மெமோ Ex.C1 ஆகும்.

மேற்படி மெமோவுடன் தாக்கல் செய்த ஒப்பந்த பத்திரத்தின்படி ரூ.65 லட்சத்தை வாங்கிக்கொண்டு மீதி தொகை ரூ.22 லட்சத்தை 3 மாத கால வாய்தாவிற்குள் பெற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு மக்கள் நீதிமன்றத்தில் கனம் நீதிமன்றத்தின் மூலம் அனுப்பப்பட்டதை ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மக்கள் நீதிமன்றத்தில் எனக்கு மீண்டும் ரூ.5 லட்சம் கூடுதலாக தரவேண்டும் என்று நான் தகராறு செய்ததால் வழக்கு மீண்டும் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல.

நான் 02.09.2024 அன்று பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட ரூ.65 லட்சத்தை நான் திருப்பி கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தற்போது மேற்படி விசயங்களை மறைப்பதற்காகதான் என்னுடைய பழைய வழக்கறிஞரை மாற்றிவிட்டு புதியதாக ஒரு வழக்கறிஞரை வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே வைத்திருந்த வழக்கறிஞர் ரூ.22 லட்சத்தை திருப்பி கொடுக்கும் பட்சத்தில் மேற்படி வழக்கை வழக்கறிஞரும் நானும் வாபஸ் பெற்றுக்கொள்வதாக நீதிமன்றத்தில் தெரிவித்தோம் என்றால்

சரியல்ல. மேற்படி விவரத்தை நீதிமன்றத்தில் நான் சொன்னேனா அல்லது என் வழக்கறிஞர் கூறினாரா என்றால் நான் கூறவில்லை. என் வழக்கறிஞர் அவ்வாறு கூறினாரா என்றால் எனக்குத் தெரியாது. அன்று நான் நீதிமன்றத்தில் இருந்தேனா என்றால் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நான் வந்து கொண்டுதான் இருக்கிறேன். நான் செய்த செயல் மிகவும் மோசடியானது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/– S.Sumathy,
Principal District Judge, Salem.